விடுதிகள், 5 மாணவியர் விடுதிகள் ஆகியன இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. இந்தக் கல்வியாண்டிலேயே நீங்கள் கேட்கக்கூடிய கோரிக்கையும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 3 முதல் 7 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உலக தாய்மொழி நாள்–உறுதிமொழி எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று உலக தாய்மொழி நாள். உலகெங்கும் உள்ள மக்களுக்கு முக்கியமானதும், அவர்களுடைய மனதிற்கு நெருக்கமானதும் ஒன்று உண்டென்றால், அது அவர்களுடைய தாய்மொழிதான். அந்தவகையில், உலகமொழிகளில் தொன்மை வாய்ந்ததும், முதன்மையானதுமான செம்மொழியாம் நம் தாய்மொழி தமிழ்மொழியைப் போற்றி வணங்கும் வகையில் நாம் அனைவரும் எழுந்து நின்று, பின்வரும் உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உறுதிமொழி வாசகங்களை படிக்க படிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் திரும்பச் சொல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

“எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்
எப்போதும் தமிழ்
என்ற நடைமுறையைக்
கொண்டுவரப் பாடுபடுவோம்.

@ 327 முதல் 675 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.